

தூத்துக்குடி மாநகரில் உள்ள 500 ஆட்டோ தொழிலாளர்களுக்கு தீபாவளி பரிசாக புத்தாடைகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான திருமதி. கீதாஜீவன் வழங்கினார். கலைஞர் அரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில் தூத்துக்குடி மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், ஒன்றிய செயலாளர்கள் காசி விஸ்வநாதன், நவநீதக்கண்ணன், ராதாகிருஷ்ணன், மாநகராட்சி தெற்கு மண்டல தலைவர் பாலகுருசாமி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன் உள்ளிட்டோர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,தொகுதி பொறுப்பாளர் கே.முருகவேல், முன்னாள் எம்.எல்.ஏ., சுப.துரைராஜ் மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன்,திருமதி ஜோன்ஸ்ருசோ ,மேயர் எஸ்.முத்துதுரை, துணைமேயர் என்.குணசேகரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாவட்டத்தில் கனமழை!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி நிவாரணப் பணிகள் தீவிரம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக்.28-

மதுரை மாவட்டத்தில் பெய்த கனமழை -முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவர்களது உத்தரவின்படி மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள்

25.10.2024 அன்று பிற்பகல் 3.00 மணி முதல் மதுரை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மழைப் பொழிவு ஏற்பட்டது. நேற்று முன்தினம் (26.10.2024) காலை 8.30 முடிய மதுரை மாவட்டத்தில் சராசரியாக 4.73 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. குறிப்பாக, சித்தம்பட்டி, இடையம்பட்டி, உசிலம்பட்டி, சோழவந்தான், குப்பனம்பட்டி, கள்ளந்திரி, தள்ளாகுளம் உள்ளிட்ட பகுதிகளில் 10 செ.மீ. வரை கனமழை பதிவானது.

இதன் காரணமாக 20 பகுதிகளில் மழை நீர் தேங்கியது. குறிப்பாக குறைந்த கால அளவில் பெய்த கனமழையின் காரணமாக மதுரை மாநகராட்சிப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள செல்லூர், விளாங்குடி, ஆனையூர் பகுதிகளில் 374 வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது.

மதுரை மாநகராட்சியும், மாவட்ட நிருவாகமும் ஒன்றிணைந்து பொதுமக்களை வெளியேற்றி 5 நிவாரண முகாம்களில் 161 நபர்களை தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தனர். மேலும், பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு இதுவரை 5215 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டது. பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் 74 மருத்துவ முகாம்களும், 44 கால்நடை மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டன. பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனைத்துத் துறை அலுவலர்களைக் கொண்ட 6 குழுக்கள் அமைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அன்று இரவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்களுக்கு நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த அறிவுறுத்தினார். மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கள நிலவரத்தை கேட்டறிந்தார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக அமைச்சர் பெருமக்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் மதுரை மாநகராட்சி ஆணையர் ஆகியோருடன் கலந்தாலோசித்து மீட்புப் பணிகளை துரிதப்படுத்த அறிவுறுத்தினார்.

கனமழையினைத் தொடர்ந்து தேங்கிய மழை நீரை வெளியேற்ற 38 நீர் இறைப்பான்கள் மற்றும் 44 JCB இயந்திரங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், செல்லூர் கண்மாயிலிருந்து உபரி நீரை வைகை ஆற்றிற்கு கொண்டு செல்ல புதிதாக கால்வாய் அமைக்கக்கப்பட்டுள்ளது. ஆணையூர் பகுதியில் உள்ள முடக்கத்தான் கால்வாயில் ஏற்பட்ட சிறு உடைப்பு உடனடியாக நீர் வள ஆதாரத் துறையால் சரி செய்யப்பட்டது. கண்ணநேந்தல் நாகனாகுளம் சின்ன கண்மாயில் நீர் நிரம்பிய நிலையில் உபரி நீர் கால்வாய் வழியாக நீர் வெளியேற்றப்பட்டு ஆத்திக்குளம் கண்மாய்க்கு கொண்டு செல்லப்பட்டது.

செட்டிக்குளம் தேவி நகர் குடியிருப்பு பகுதி, கோவில் பாப்பாக்குடி கிராமம் சத்யா நகர், தினமணி நகர் பகுதிகளில் தேங்கிய மழை நீரை வெளியேற்ற ஊராட்சி நிருவாகத்தினால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், நீர் தேங்கிய பகுதிகளில், மழை நீரை வெளியேற்றும் பணி தொடர்ந்து முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

மதுரை மாநகராட்சி பகுதிகளில் பாதிப்பிற்குள்ளாகும் பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைக்க 102 நிவாரண முகாம்கள் கண்டறியப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மாநகராட்சி பகுதிகளில் பருவமழை பாதிப்புகளை கையாள்வதற்கென்று தனியே பல்துறை மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மதுரை மாநகராட்சி பகுதிகளில் 240.30 கி.மீ. நீளத்திற்கு மழை நீர் வடிகால் தூர் வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 54.20 கி.மீ. நீளத்திற்கான கால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. நீர்நிலைகளில் உடைப்பு ஏற்படும் நேர்வுகளில் உடனடி தடுப்பு நடவடிக்கைக்காக 5000 மணல் மூட்டைகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, போதுமாமன அளவு பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு உள்ளிட்ட சுகாதாரப் பராமரிப்பு பொருட்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து துறை அலுவலர்களுடன் அமைச்சர் பெருமக்கள் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், துணை ஆட்சியர் தலைமையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் மொத்தம் 11 பல்துறை மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பருவமழை பாதிப்புகளை எதிர்கொள்ள 286 JCBக்கள், 506 லாரிகள், 65 மர அறுப்பான்கள், 94 ஜெனரேட்டர்கள், 5 படகுகள் உள்ளிட்ட மீட்பு உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மதுரை மாவட்டத்தில் 2425.19 கி.மீ. நீளத்திற்கு மழை நீர் வடிகால்களில் அடைப்புகள் நீக்கப்பட்டதோடு, 1992.53 கி.மீ. நீளத்திற்கு கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் பெய்த மழையின் காரணமாக நீர் தேங்கிய பகுதிகளுக்கு நிரந்தர தீர்வு காண தொடர்புடைய துறைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது உத்தரவின் படி, அமைச்சர் பெருமக்களின் ஒருங்கிணைப்பில் மாவட்ட நிருவாகமும், மாநகராட்சியும் நிவாரணப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.டி. தண்டபாணி

### அக்டோபர் 28 (2001)



**கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும்

# பருவமழை குறித்து எடுக்கப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, அக்.28-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.10.2024) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையை யொட்டி தற்போது வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், வரும் மழைக்காலங்களை யொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

கடந்த 14-ஆம் தேதி, 15-ஆம் தேதி, 16-ஆம் தேதி ஆகிய நாட்களில் பெய்த மழையின் போது மழை நீரை அகற்றும் பணியில் சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் பணியாற்றிட 15 மண்டலங்களுக்கும் ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, இரவு, பகலாக சிறப்பாக பணிகளை மேற்கொண்டீர்கள். அவ்வளவு மழை நீரும் சில மணி நேரங்களிலேயே வடிந்து சென்றது. சில பகுதிகளில் மோட்டார் வைத்து நீர் அகற்றப்பட்டது. சில மணிநேரங்களிலேயே பொதுமக்கள் தங்களுடைய இயல்பு நிலைக்கு திரும்பினார்கள். அடுத்த நாட்களில் மழை பெய்த சுவடு கூட தெரியாத அளவுக்கு மிகச் சிறப்பாக பணியாற்றிய உங்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது பெய்துள்ள மழை வெறும் ஆரம்பம்தான். நவம்பர் மாதத்தில்தான் தீவிர மழைக்காலம் ஆரம்பமாகும் என்று நம்முடைய வானிலை ஆய்வு மையத்தினர் கணித்து உள்ளார்கள். கடந்த 19.10.2024 அன்று நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அந்த ஆய்வுக் கூட்டத்தில் மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் நீங்கள் கற்றுக் கொண்ட அனுபவங்கள் குறித்து இங்கே தெரிவிக்கலாம்.

நீங்கள் நியமிக்கப்பட்டுள்ள பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மழை, வெள்ள முன்னேற்பாட்டு பணிகள் குறித்து தெரிவிக்கவும். நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஓட்டேரி நல்லா கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய் மற்றும் வீராங்கல் ஓடை ஆகிய நீர்நிலைகளை சென்னை பெருநகர மாநகராட்சி பராமரிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன் பிறகு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். 14.10.2024 அன்று இரவு, பருவமழையினால் நாராயணபுரம் ஏரிக்கரையில் சேதமடைந்த பகுதிகள், அந்த ஏரியின் shutter பகுதி மற்றும் கீழ்கட்டளை ஏரியின் உபரிநீர் கால்வாயின் உடைப்பு பகுதிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டோம். அப்போது நீர்வளத்துறை அலுவலர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக் கொண்டோம். அங்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நீர்வளத்துறை அலுவலர்கள் இங்கே தெரிவிக்க வேண்டும்.

ஒக்கியம் மடுவு பகுதியில் பார்வையிட்டோம். அங்கு தெரிவித்த ஆலோசனைகளுக்கு முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா, என்பது குறித்தும் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

அதேபோல் எண்ணூர் முகத்துவாரத்தில் படிந்துள்ள (FLY ASH) சாம்பல் கழிவுகளை அகற்றுவதற்கு நிதி ஒதுக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றோம். உடனே முதலமைச்சர் அவர்கள் உடனடியாக வடசென்னை அனல் மின் நிலையத்தின் நிதி உதவியாக ரூ. 28.00 கோடி வழங்க ஒப்புதல் அளித்தார்கள். தற்பொழுது நடவடிக்கைகள் எந்த நிலையில் உள்ளன என்பதையும் இங்கே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்த 15 நாட்களில் கண்காணிப்பு அலுவலர்கள் கட்டுப்பாட்டில் உள்ள மண்டலங்களில் மேற்கொள்ளப்பட உள்ள சீரமைப்பு நடவடிக்கைகள் எவை, எவை என்றும், அவை தற்போது எந்த நிலையில் உள்ளன என்பது குறித்தும் தெரிவிக்கவும் என்று கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் மழை நீர் தேங்கிய இடங்களின் விவரங்கள், அந்த இடங்களில் மழைநீர் வடிய எடுத்துக் கொண்ட நேரம், மழைநீர் கால்வாய்கள் மூலம் நீர் வடிந்து சென்ற இடங்களின் விவரங்கள், மோட்டார் பம்ப் வைத்து நீர் அகற்றப்பட்ட இடங்களின் விவரங்கள் என்று விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் மழையின்போது மின்தடை செய்யப்பட்ட பகுதிகள், எவ்வளவு மணி நேரத்தில் மின் இணைப்பு அந்த இடங்களுக்கு வழங்கப்பட்டன. மின் இணைப்பு துண்டிக்காமல் இருக்க மேற்கொள்ளப்பட்ட, படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார். பத்திரிக்கைகளில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கைகள் குறித்தும், சமூக வலைதளங்களில் வெளிவந்த தகவல்கள் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை பெருநகர மாநகராட்சி, நீர்வளத்துறை ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகள் குறித்தும், பிற பணிகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

வருகின்ற அக்டோபர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னேற்பாட்டு பணிகளையும் கூடுதல் கவனத்துடன் அனைத்து துறை அலுவலர்களும், கண்காணிப்பு அலுவலர்களும் மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். சென்ற மழையின்போது மிகச் சிறப்பாக பணியாற்றி மக்களுடைய நன்மதிப்பை நாம் பெற்றோம். எதிர்காலத்திலும் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி மழை வெள்ளத்தில் இருந்து மக்களை காத்து இந்த அரசிற்கு நற்பெயரை பெற்றுத் தர நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கின்றேன் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் செயற்குழு கூட்டத்தில் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில் குமார் பேசினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால்உசேன், மார்கிரேட்மேரி, மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி நிலக்கோட்டை தொகுதி பொறுப்பாளரும் கொள்கை பரப்பு குழு துணைச் செயலாளருமான கம்பம் ஆர்.பாண்டியன், திண்டுக்கல் தொகுதி பொறுப்பாளரும் மாநில நெசவாளர் இணை செயலாளருமான எம் கோவிந்தசாமி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை கே.எஸ்.பாண்டியன்

### அக்டோபர் 28 (1952)



**கழகத்தில் நீங்காப் பற்றுக் கொண்டு உழைத்தவரும் – சிறந்த பொதுநலத் தொண்டராகிய இவர், கழகம் துவங்கிய காலத்தில், வடசென்னை பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தளரா உழைப்பாளராக இருந்ததுடன், அப்போராட்டத்தில் சிறை சென்ற செயல்வீரர்.**

**தி.மு.கழகம் தொடக்க நாள் கூட்டத்தை சிறப்புற நடத்த காரணமானவர்களில் இவரும் ஒருவர்.**

**“கொள்கைக்காக வாழ்ந்து, கொள்கைக்காக உயிரை இழந்த அந்த அருமை வீரர் ஆற்றிய தொண்டுப்பாதையில் அவர் சிந்திய இரத்தத்தை நினைவில் கொண்டு, நான் சென்று கொண்டிருப்போம்!” என, இவர் எதிர்க்கட்சியினரால் படுகொலை செய்யப்பட்ட மறுநாள் 9–11–1952 நாளிட்ட “திராவிட நாடு” தலையங்கம் வெளியிட்டு சிறப்பித்தது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**